instructions have been issued and whether English medium is introduced in all sections and whether it is going to take effect from this current year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மேதமேடிக்ஸ் குரூப்பிலே ஆங்கிலப் பிரிவும் தமிழ்ப் பிரிவும் இருக்கிறது. சயன்ஸிலே ஆங்கிலத்திலே இல்லாமல் தமிழில் இருக்கிறது. மேதமேடிக்ஸில் இரண்டு மொழிப் பிரிவுகளும் இருக்கின்றன. பி.ஏ.விலே ஆங்கிலத்திலே இருக்கிறது, தமிழில் இல்லை. பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரியிலே இரண்டு பிரிவுகளும் இருக்கின்றன, பிஸிக்ஸிலே இரண்டு மொழிப் பிரிவுகளும் இருக்கின்றன, மேதமேடிக்ஸிலும் இரண்டு மொழிப் பிரிவுகளும் இருக்கின்றன. சயன்ஸ் குரூப்பிலே ஆங்கிலம் இல்லாமல் இருப்பதால் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Registry office for Anandapuram

*139 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal under the consideration of the Government to open a Registry Office at Anandapuram in Gingee taluk?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அனந்தபுரத்தில் ஒரு துணை பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்று திறப்பதைப் பற்றி அரசு பரிசீலித்தது. அனந்தபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறப்பதினால் அண்மையில் உள்ள செஞ்சி, அன்னியூர் ஆகிய ஊர்களில் இருக்கும் துணைப்பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கும் போதிய வேலை இருக்காது என்று கருதப்படுகிறது. எனவே, அனந்தபுரத்தில் ஒரு துணைப்பத்திரப் பதிவு அலுவலகம் துவக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் இப்போதைக்கு நிறைவேற்றுவதற்கு இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, 1944-ம் ஆண்டு முதற்கொண்டே அனந்தபுரத்தில் ஒரு பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அங்கே உள்ள மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்போதும் அப்படித் திறக்க இயலாது என்று சொல்லி விட்டால், அங்கே இருக்கும் மக்கள் செஞ்சிக்குத் தான் வரவேண்டும். கிட்டத்தட்ட 35 மைல் ஆகிறது. அதைத் தடுக்கும் வகையில் அனந்தபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஒரு துணைப்பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமானால் குறிப்பிட்ட அளவு பத்திரப் பதிவு நடக்க வேண்டுமென்று இருக்கிறது. அங்கே அனந்தபுரத்தில் இருப்பவர்கள் சிரமப்படுவதாக உறுப்பினர் சொன்னார்கள். 3-வது மைலிலுள்ள அன்னியூரில் ஒரு துணைப்பத்திரப் பதிவு அலுவலகம் இருப்பதால், அனந்தபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் துவக்கும் நிலை ஏற்படும் வரையில் அனந்தபுரம் மக்கள் அன்னியூர் சென்று வரலாம்.